

ஆத்தூர் தொகுதி முழுவதும் சென்று பொதுமக்களிடமிருந்து கோரிக்கை மனுக்களை பெற்று உடனடியாக நிறைவேற்றப்படும் என்று ஊரக வளர்ச்சி துறை அமைச்சர் ஐ.பெரியசாமி உறுதியளித்தார். மணலூர் ஊராட்சி பெரும்பாறை ஆர்.ஆர்.நகர் மக்கள் தங்கள் கோரிக்கையை அமைச்சர் நிறைவேற்றியதற்கு ஏலக்காய் மாலை அணிவித்து நன்றி தெரிவித்தனர். அருகில் தலைமை செயற்குழு உறுப்பினர் நடராஜன், மாவட்ட பொருளாளர் கு.சத்தியமூர்த்தி உட்பட தி.மு.க. நிர்வாகிகள் உள்ளனர்.



திருச்சுழி அருகே கல்லூரணியில் உள்ள எஸ்.பி.கே. மேல்நிலைப் பள்ளி வளாகத்தில் பெருந்தலைவர் காமராஜர் வெண்கல சிலை திறப்பு விழா நடைபெற்றது. இந்நிகழ்ச்சியில் நிதி சுற்றுச்சூழல் மற்றும் காலநிலை மாற்றுத்துறை அமைச்சர் தங்கம் தென்னரசு தலைமை வகித்தார். சிலையை தூத்துக்குடி எம்.பி.கனிமொழி கருணாநிதி திறந்து வைத்தார். உடன் இராமநாதபுரம் எம்.பி.நவாஸ் கனி, விருதுநகர் சட்டமன்ற உறுப்பினர் ஏ.ஆர்.ஆர்.சீனிவாசன், சிவகாசி மேயர் சங்கீதா இன்பம், திருச்சுழி ஒன்றிய செயலாளர் பொன்னுத்தம்பி, சந்தானப் பாண்டியன், கல்லூரணி இராசமாணிக்கம் ஆகியோர் இருந்தனர்.

### சிதம்பரத்தில் ரூ.5.70 கோடியில்

# ஐயா எல். இளையபெருமாள் நூற்றாண்டு அரங்கம் - சிலை!

## முதல்வர் மு.க.ஸ்டாலின் திறந்து வைத்தார்!

**சிதம்பரம், ஜூலை 17**

**சிதம்பரத்தில் ரூ.5.70 கோடி செலவில் கட்டப்பட்டுள்ள ஐயா எல். இளையபெருமாள் அவர்களின் திருவுருவச் சிலையுடன் கூடிய நூற்றாண்டு அரங்கத்தை முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்கள் திறந்து வைத்தார்.**'

முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் நேற்று முன்தினம் (15.7.2025) கடலூர் மாவட்டம், சிதம்பரம் வட்டம், லால்புரத்தில் ஒடுக்கப்பட்ட சமூக மக்களின் ஒளி விளக்காகவும், நெறிசார்ந்த அரசியலின் அடையாளமாகவும் விளங்கிய அய்யா இளையபெருமாள் அவர்களின் தொண்டை சிறப்பிக்கும் வகையில் 5 கோடியே 70 இலட்சம் ரூபாய் செலவில் கட்டப்பட்டுள்ள ஐயா எல். இளையபெருமாள் அவர்களின் திருவுருவச் சிலையுடன் கூடிய நூற்றாண்டு அரங்கத்தை திறந்து வைத்தார்.

தமிழ்நாட்டின் புகழ்சால் பெருந்தகையாளர்கள், தமிழ்மொழியின் வளர்ச்சிக்கு அரும்பாடுபட்டு தமிழ்நாட்டிற்குப் பெருமைத் தேடித்தந்த அறிஞர் பெருமக்கள், சமூகநீதி, விடுதலை உணர்வுகளை ஊட்டிவளர்த்த கவிஞர்கள், இசை மேதைகள், தமிழ்நாட்டின் தியாக வரலாற்றுக்கு உன்னத சாட்சியங்களாக விளங்கும் தியாகிகள், மேதைகள் மற்றும் அறிஞர்களின் நினைவு களைப் போற்றிப் பெருமைப்படுத்தும் வகையிலும், தமிழ் சமுதாயத்திற்கு அவர்களின் பங்களிப்பை பெருமைப்படுத்தும் வகையிலும், செய்தி மக்கள் தொடர்புத் துறையின் சார்பில் நினைவகங்கள், திருவுருவச் சிலைகள், அரங்கங்கள், நினைவுத் தூண்கள், நினைவுச் சின்னங்கள் ஆகியவை அமைக்கப்பட்டு, சிறந்த முறையில் பராமரிக்கப்பட்டு, பாதுகாக்கப்பட்டு வருகின்றன.

முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களின் தலைமையிலான அரசு பொறுப்பேற்றப் பின்னர், விடுதலைப் போரில் இன்னுயிர் ஈந்தும், சொத்து சுகங்களை இழந்தும், தியாகங்கள் புரிந்த சுதந்திரப் போராட்ட தியாகிகளைப் போற்றிப் பெருமைப்படுத்திடும் வகையில், காந்தி மண்டபத்தில் வ.உ.சி. அவர்கள் சிறையில் இழுத்த செக்கு வைக்கப்பட்டிருக்கக்கூடிய மண்டபம் பொலிவூட்டப்பட்டு அங்கு அவரது மார்பளவு சிலை, வீரபாண்டிய கட்டபொம்மன் அவர்களுக்கு திருவுருவச் சிலை, மருது சகோதரர்களுக்கு திருவுருவச் சிலை, கோயம்புத்தூர் வ.உ.சி. பூங்காவில் வ.உ. சிதம்பரனார் முழு உருவச் சிலை, மூவலூர் இராமாமிர்தம் அம்மையார் அவர்களுக்கு திருவுருவச் சிலை, டாக்டர் முத்துலட்சுமி ரெட்டி அம்மையார் அவர்களுக்கு திருவுருவச் சிலை, என பல்வேறு தியாக சீலர்களுக்கு சிலைகளை நிறுவி, மணிமண்டபங்கள் அமைத்து அவர்களின் புகழ்போற்றி வருகிறது.

**பெரியவர் இளையபெருமாள் திருவுருவச் சிலையுடன் கூடிய நூற்றாண்டு அரங்கம்!**

நாடு முழுவதும் ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியின மக்களுக்காக அடைபட்டிருந்த உரிமை வாசலைத் திறந்த பெரியவர் இளையபெருமாள் அவர்கள், பள்ளியில் படிக்கும் போதே இரட்டைப் பானை முறையை எதிர்த்து, பள்ளிக்குள் மறைந்திருந்து இரவு நேரத்தில் தொடர்ச்சியாக பானைகளை உடைத்ததால் அந்த வட்டாரத்தில் இரட்டை பானை முறை நீக்கப் பட்டது. இராணுவத்தில் பணியாற்றியபோது அங்கு நிலவிய பாகுபாடு குறித்து துணிச்சலோடு உயர் அதிகாரிக்குப் புகார் செய்தார். பின்னர் இராணுவத்தில் இருந்து விலகி மக்கள் பணியாற்ற வந்தார்.

ஒன்றுபட்ட தென்னார்க்காடு மாவட்டம் தஞ்சை மாவட்டத்தில் 1940 முதல் 1970 வரையில் நடந்த மிகப்பெரிய சமூகப் போராட்டங்களை பெரியவர் இளைய பெருமாள் நடத்தி, ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியின மக்கள் மத்தியில் எழுச்சியை ஏற்படுத்தினார். காங்கிரஸ் கட்சியில் தன்னை இணைத்துக் கொண்டு சுதந்திர இந்தியாவில் நடந்த முதல் பொதுத் தேர்தலில், 1952 ஆம் ஆண்டு, கடலூர் நாடாளுமன்றத் தேர்தலில் போட்டியிட்டு வெற்றி பெற்றார். அண்ணல் அம்பேத்கர் அவர்கள் பெரியவர் இளைய பெருமாள் நடத்திய மக்கள் போராட்டங்கள், தீண்டாமை எதிர்ப்பு போராட்டங்கள் குறித்து கேட்டறிந்து பாராட்டியுள்ளார்.

1980 முதல் 1984 வரை சென்னை எழும்பூர் தொகுதி சட்டமன்ற உறுப்பினராகவும், மூன்று முறை நாடாளுமன்ற உறுப்பினராகவும், தமிழ்நாடு காங்கிரஸ் தலைவராகவும், அகில இந்திய தீண்டாமை ஒழிப்புக் கமிட்டித் தலைவராகவும் பெரியவர் இளைய பெருமாள் அவர்கள் மக்கள் தொண்டாற்றியுள்ளார்.

ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியின மக்களின் மேன்மைக்காக உருவாக்கப்பட்ட அகில இந்திய ஆணையத்தின் தலைமைப் பொறுப்பை வகித்து, இந்தியா முழுமைக்கும் பயணம் செய்து, சாதிக் கட்டமைப்பையும், தீண்டாமைக் கொடுமையையும் ஆய்வு செய்து நாடாளுமன்றத்தில் தாக்கல் செய்தார். பிற்காலத்தில் கொண்டு வரப்பட்ட வன்கொடுமைத் தடுப்புச் சட்டத்துக்கு அடித்தளமாக பெரியவர் இளையபெருமாள் ஆணையத்தின் அறிக்கை அமைந்தது.

1998ஆம் ஆண்டு அண்ணல் அம்பேத்கர் அவர்கள் பெயரிலான தமிழ்நாடு அரசின் விருதை முதன்முதலாக பெரியவர் இளையபெருமாள் அவர்களுக்குத்தான் முத்தமிழறிஞர் கலைஞர் அவர்கள் வழங்கி சிறப்பித்தார்.

ஒடுக்கப்பட்ட சமூக மக்களின் ஒளி விளக்காக மட்டுமல்ல; நெறிசார்ந்த அரசியலின் அடையாளமாகவும் விளங்கிய பெரியவர் இளையபெருமாள் அவர்களின் நூற்றாண்டைப் போற்றும் வகையில் கடலூர் மாவட்டம், சிதம்பரத்தில் பெரியவர் இளைய பெருமாள் நூற்றாண்டு நினை வரங்கம் அமைக்கப்படும் என்று முதலமைச்சர் அவர்கள் 18.4.2023 அன்று தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையில், விதி 110ன் கீழ் அறிவித்தார்.

அந்த அறிவிப்பிற்கிணங்க, சமூக இழிவு களையப்பட வேண்டும்; சாதிய வன்முறை ஒடுக்கப்பட வேண்டும்; சமத்துவ, சுயமரியா தைச் சமூகம் உருவாக்கப்பட வேண்டும் என்ற உன்னத நோக்கத்துக்காக உழைத்த பெரியவர் இளையபெருமாள் அவர்களின் தொண்டை சிறப்பிக்கும் வகையில் கடலூர் மாவட்டம், சிதம்பரத்தில் கட்டப்பட்டுள்ள ஐயா எல். இளையபெருமாள் அவர்களின் திருவுருவச் சிலையுடன் கூடிய நூற்றாண்டு அரங்கத்தை முதலமைச்சர் அவர்கள் இன்றைய தினம் திறந்து வைத்து, பார்வையிட்டார். மேலும், ஐயா இளையபெருமாள் அவர்களின் திருவுருவச் சிலைக்கு மாலை அணிவித்து மரியாதை செய்தார்.

இந்த விழாவில், நகராட்சி நிர்வாகத் துறை அமைச்சர் கே.என். நேரு, பொதுப்பணித் துறை அமைச்சர் எ.வ. வேலு, வேளாண்மை உழவர் நலத்துறை அமைச்சர் எம்.ஆர்.கே.பன்னீர்செல்வம், தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித் துறை அமைச்சர் மு.பெ.சாமிநாதன், தொழிலாளர் நலன் மற்றும் திறன் மேம்பாட்டு துறை அமைச்சர் சி.வி. கணேசன், தமிழ்நாடு அரசின் தில்லி சிறப்பு பிரதிநிதி ஏ.கே.எஸ். விஜயன், நாடாளுமன்ற உறுப்பினர்கள் தொல்.திருமாவளவன், து.ரவிக்குமார், டாக்டர். எம்.கே.விஷ்ணு பிரசாத், சட்டமன்ற உறுப்பினர்கள் கு. செல்வப்பெருந்தகை, ம. சிந்தனை செல்வன், தி. வேல்முருகன், கோ. அய்யப்பன், சபா. ராஜேந்திரன், ஆர். ராதாகிருஷ்ணன், இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் மாநிலச் செயலாளர் இரா. முத்தரசன், இந்திய யூனியன் முஸ்லீம் லீக் தேசியத் தலைவர் பேராசிரியர் கே.எம். காதர் மொகிதீன்,

மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியின் முன்னாள் மாநிலச் செயலாளர் கே. பாலகிருஷ்ணன், தமிழ்நாடு காங்கிரஸ் கமிட்டியின் முன்னாள் மாநிலத் தலைவர்கள் கே.எஸ்.அழகிரி, கிருஷ்ணசாமி, தலைமைச் செயலாளர் நா. முருகானந்தம், தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித்துறை செயலாளர் வே. ராஜாராமன், செய்தி மக்கள் தொடர்புத் துறை இயக்குநர் மரு. இரா. வைத்திநாதன், கடலூர் மாவட்ட ஆட்சித் தலைவர் சிபி ஆதித்யா செந்தில்குமார், ஐயா இளையபெருமாள் அவர்களின் குடும்பத்தினர், உள்ளாட்சி அமைப்புகளின் பிரதிநிதிகள் மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்துகொண்டனர்.

### 'ஓரணியில் தமிழ்நாடு' முன்னெடுப்பு திட்டத்தில்

# மயிலாடுதுறையில் மக்களை நேரடியாகச் சந்தித்து முதல்வர் மு.க.ஸ்டாலின் உறுப்பினர்களை சேர்த்தார்!

## இதுவரை ஒரு கோடியே 35 லட்சத்து 43 ஆயிரத்து 103 பேர் இணைந்தனர்!



கழகத் தலைவரும், முதலமைச்சருமான மு.க. ஸ்டாலின் அவர்கள் நேற்று (16.7.2025) மயிலாடுதுறை மாவட்டம், மன்னம்பந்தல் ஊராட்சி, அம்பேத்கர் தெருவில் "ஓரணியில் தமிழ்நாடு என்ற மாபெரும் முன்னெடுப்பு திட்டத்தில் மக்களை நேரடியாக சந்தித்து உறுப்பினர்களை சேர்த்தார்.

**மயிலாடுதுறை, ஜூலை, 17-**

**நமது திராவிட மாடல் அரசின் சாதனைகளை மக்களிடம் எடுத்துச் சொல்லி, தமிழ்நாட்டின் மண் மொழி மானம் காக்க திராவிட முன்னேற்றக் கழகத்தில் மக்களை உறுப்பினர்களாக சேர்க்கும் "ஓரணியில் தமிழ்நாடு" என்ற மாபெரும் முன்னெடுப்பு திட்டத்தில் உறுப்பினர்கள் சேர்க்கையை கழகத் தலைவரும், முதலமைச்சருமான மு.க.ஸ்டாலின் அவர்கள் 3.7.2025 அன்று சென்னை, ஆழ்வார்பேட்டையில் மக்களை நேரடியாக சந்தித்து தொடங்கி வைத்தார்.**

அதனைத் தொடர்ந்து, 10.7.2025 அன்று திருவாரூர் சட்டமன்றத் தொகுதிக்குட்பட்ட சன்னதி தெருவில் கழகத் தலைவர் முதலமைச்சர் அவர்கள், "ஓரணியில் தமிழ்நாடு"என்ற மாபெரும் முன்னெடுப்பு திட்டத்தில், மக்களை நேரடியாக சந்தித்து, இத்திட்டத்தில் உறுப்பினர்களை சேர்த்தார்.

மேலும், சென்னை, அண்ணா அறிவாலயத்தில் கழக தகவல் தொழில் நுட்ப அணியால் புதிதாக அமைக்கப்பட்டுள்ள கட்டுப்பாட்டு அறையை (War Room) 12.7.2025 அன்று கழகத் தலைவர் முதலமைச்சர் அவர்கள் திறந்து வைத்து, திராவிட முன்னேற்றக் கழகத்தில் மக்களை உறுப்பினர்களாக சேர்க்கும் "ஓரணியில் தமிழ்நாடு" என்ற மாபெரும் முன்னெடுப்பு திட்டத்தின் கீழ் தமிழ்நாட்டின் பல்வேறு மாவட்டங்களில் இணைக்கப்பட்ட மக்களின் விவரங்கள் குறித்து ஆய்வு மேற்கொண்டார்.

அதன் தொடர்ச்சியாக மயிலாடுதுறை மாவட்டத்திற்கு வருகை தந்த கழகத் தலைவரும், மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சருமான மு.க. ஸ்டாலின் அவர்கள் நேற்று (16.7.2025) "ஓரணியில் தமிழ்நாடு" என்ற மாபெரும் முன்னெடுப்பு திட்டத்தில் மன்னம்பந்தல் ஊராட்சி, அம்பேத்கர் தெருவில் மக்களை நேரடியாக சந்தித்து உறுப்பினர்களை சேர்த்தார்.

இந்நிகழ்வின்போது, நகராட்சி நிர்வாகத் துறை அமைச்சர் கே.என். நேரு, வேளாண்மை உழவர் நலத் துறை அமைச்சர் எம்.ஆர்.கே.பன்னீர் செல்வம், பிற்படுத்தப்பட்டோர் நலத் துறை அமைச்சர் சிவ.வீ. மெய்யநாதன், மாவட்ட கழகச் செயலாளரும், சட்டமன்ற உறுப்பினருமான நிவேதா எம். முருகன், மன்னம்பந்தல் ஊராட்சி மன்ற தலைவர் சூர்யா, மயிலாடுதுறை கிழக்கு ஒன்றியச் செயலாளர் முருகமணி ஆகியோர் உடனிருந்தனர்.

**கழகத் தலைவரும், முதலமைச்சருமான மு.க.ஸ்டாலின் அவர்களின் அழைப்பை ஏற்று "ஓரணியில் தமிழ்நாடு" என்ற மாபெரும் முன்னெடுப்பு திட்டத்தில் இதுவரை 1,35,43,103 நபர்கள் இணைந்துள்ளனர் என்பது குறிப்பிடத்தக்கது.**

### பெருந்தலைவர் காமராஜர் கண்ட கல்விக் கனவுகளை

# 'புதுமைப் பெண்' - 'தமிழ்ப் புதல்வன்' - 'நான் முதல்வன்' - போன்ற திட்டங்கள் வழியே 'திராவிட மாடல்' அரசு நனவாக்கி வருகிறது!

## வலைதளப்பதிவில் – துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலின் பெருமிதம்!


**சென்னை, ஜூலை 17**

**பெருந்தலைவர் காமராஜர் அவர்களின் பிறந்தநாளை முன்னிட்டு, நேற்று முன்தினம் விடுத்த வலைதளப்பதிவில், துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள், "காமராஜர் கண்ட கல்விக் கனவுகளை, 'புதுமைப் பெண்' - 'தமிழ்ப் புதல்வன்' - 'நான் முதல்வன்' - போன்ற திட்டங்களின் வழியே 'திராவிட மாடல்' அரசு நனவாக்கி வருகிறது" என்று பெருமிதத்துடன் குறிப்பிட்டார்.**

துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் வெளியிட்டுள்ள சமூக வலைதளப்பதிவு வருமாறு:-

கல்வி எனும் ஒளி, சமூகத்தில் மண்டிக்கிடந்த இருளை எப்படியெல்லாம் கிழித்தெறியும் என்பதை சாத்தியப் படுத்திக் காட்டிய கர்ம வீரர் காமராஜரின் பிறந்த நாள் இன்று!

எட்டாக்கனியாக இருந்த கல்வி,



ஏழை எளிய பிள்ளைகள் எல்லோருக்கும் சென்று சேர பள்ளிகளைத் திறந்து, மதிய உணவிட்ட காமராஜரின் பிறந்த நாளை, "கல்வி வளர்ச்சி நாள்" என்று அறிவித்தார் முத்தமிழறிஞர் கலைஞர் அவர்கள்!

காமராஜர் வாழ்ந்த தியாகராயர் நகர் இல்லத்தைப் புதுப்பிப்பதோடு, அவர் பெயரில் நூலகம் மற்றும் அறிவுசார் மையத்தை திருச்சியில் அமைக்கிறார், நம் முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்கள்!

காமராஜர் கண்ட கல்விக்கனவுகளை, புதுமைப்பெண், தமிழ்ப்புதல்வன், நான் முதல்வன் போன்ற திட்டங்களின் வழியே நனவாக்கி வருகிறது நம் திராவிடமாடல் அரசு!

பெருந்தலைவர் காமராஜர் ஆற்றிய பணிகள் தமிழ் மண்ணில் என்றும் நிலைத்திருக்கும் வழிகாட்டும்.

அவர் புகழ் ஓங்கட்டும்!

இவ்வாறு அப்பதிவில், துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் குறிப்பிட்டுள்ளார்.



விழுப்புரம் மாவட்டம் செஞ்சி பேரூராட்சியில் நடைபெற்ற "உங்களுடன் ஸ்டாலின்திட்ட முகாமினை முன்னாள் அமைச்சர் செஞ்சி மஸ்தான் எம்.எல்,ஏ. தொடங்கி வைத்து பயனாளிகளுக்கு நலத்திட்ட உதவிகளை வழங்கினார்.உடன் முன்னாள் சட்டமன்ற உறுப்பினர் டாக்டர் மாசிலாமணி,ஒன்றிய பெருந்தலைவர்கள் செஞ்சி விஜயகுமார், மேல்மலையனூர் கண்மணி நெடுஞ்செழியன், வல்லம் அமுதா ரவிக்குமார், மயிலம் யோகேஸ்வரி மணிமாறன், செஞ்சி பேரூராட்சி மன்ற தலைவர் மொக்தியார்அலி மஸ்தான்,வேளாண்மை துணை இயக்குனர் குமாரி ஆனந்தி,பேரூராட்சிகளின் செயற்பொறியாளர் ராதாகிருஷ்ணன்,வட்டாட்சியர் துரைசெல்வன், பேரூராட்சி செயல் அலுவலர் கலையரசிஆகியோர் உள்ளனர்.